# இரண்டாம் வகைப் பாடசாலைகளின் (Type –II) கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் கீழ்மட்ட நிலையில் காணப்படுவதற்கான காரணங்களும் தீர்வுகளும்

மட்டக்களப்பு வலயத்தை அடிப்படையாகக் கொண்ட அளவை நிலை ஆய்வு

LIBRARY
12 OCT 2009
Eastern University, Sri Lanka.

நல்லதம்பி சிதம்பரமூர்த்தி

**EU/PGS/2007/MED/27**

MED18
Thesis
Library - EUSL

கல்வி முதுமாணிக் கற்கை நெறி
கிழக்குப் பல்கலைக்கழகம்
வந்தாறுமூலை
இலங்கை
2008

PROCESSED
Main Library, EUSL

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| 01. கிழக்கு மாகாணக் கல்வி வலயங்கள் வரைபடம் | ii |
| 02. மட்டக்களப்பு கல்வி வலய வரைபடம் | iii |
| 03. ஆய்வாளரின் உறுதியுரை | iv |
| 04. நெறியாளரின் சான்றிதழ் | v |
| 05. நன்றியுரை | vi |
| 06. ஆய்வுச் சுருக்கம் | vii |
| அத்தியாயம் - 1 : ஆய்வு அறிமுகம் | 01 - 24 |
| அத்தியாயம் - 2 : இலக்கிய மீளாய்வு | 25 - 36 |
| அத்தியாயம் - 3 : ஆய்வு முறை | 37 - 46 |
| அத்தியாயம் - 4 : தரவு சேகரிப்பும் பகுப்பாய்வும் | 47 - 90 |
| அத்தியாயம் - 5 : ஆய்வின் முடிவுகள் | 91 - 101 |

உசாத்துணைகள்

பின்னிணைப்புக்கள்

- வினாக்கொத்துக்கள்
- புள்ளிவிப்ர மாதிரிகள்

# ஆய்வுச் சுருக்கம்

ஆய்வின் பிரதான மையப்பொருள் தெரிவு செய்யப்பட்ட வகை - II ஐச் சார்ந்த பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையில் குறைவான பெறுபேற்றினைப் பெறுவதற்கான காரணங்களை இனங்காணல் முக்கியம் பெறுகின்றது.

இப்பாடசாலைகளைப் பொறுத்தவரை தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையிலும், ஒரு மாணவன் கூட சித்தியடையாத நிலை பரவலாகக் காணப்படுகின்றது. அத்துடன் 11 வருடங்கள் கல்வி கற்கும் 80 வீதத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் அவர்களது உயர்கல்வி வாய்ப்பை இழக்கின்ற ஒரு அவல நிலையினையும் இப்பாடசாலைகள் தோற்றுவிக்கின்றன. 1AB தர பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களில் 80 வீதத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் உயர்கல்வி வாய்ப்பினைப் பெறுகின்ற அதேவேளை இரண்டாம் தரப் பாடசாலைகள் அதற்கெதிரான பெறுபேற்றினைக் காட்டி நிற்கின்றன. மேலும் வகை II ஐச் சார்ந்த பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் அனைவரும் நகரப் பாடசாலைகளுக்கு சென்று கல்வி கற்க முடியாத கீழ் மட்ட வருமான மட்டத்தைக் கொண்ட மாணவர்களாக உள்ளனர். இப்பாடசாலையில் வழங்கப்படுகின்ற கல்வியின் தரத்தினை உயர்த்துவது இவ் ஆய்வின் தேவையாக உள்ளது. கல்வியில் சமவாய்ப்பு, கல்வியில் சமசந்தர்ப்பம் என்னும் கல்வியின் அகிலக் குறிக்கோள் அமுல்படுத்தப்பட வேண்டும். அதனூடாக இரண்டாம் வகைப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான உயர்கல்வி வாய்ப்பும், தொழிற் சந்தை வாய்ப்பும் மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டும். அதற்கான சூழல் அம்மாணவர்களுக்கு இவ் ஆய்வின் மூலம் உருவாக்கப்படல் வேண்டும்.

இவ் அளவை நிலை ஆய்வானது ஐந்து அத்தியாயங்களாக முன்வைக்கப்பட்டுள்ளது. முதலாம் அத்தியாயம் ஆய்விற்கான அறிமுகத்தினைக் கொண்டுள்ளது. அதில் எண்ணக்கரு விளக்கம், ஆய்விற்கான பின்னணி, ஆய்வுப்புலத்தின் சமூக பொருளாதார நிலைப்பாங்கு, ஆய்வு அமைப்பு, ஆய்வு முறை, ஆய்வு வினாக்கள், ஆய்வுக் குறிக்கோள்கள், ஆய்வின் மூலம் எதிர்பார்க்கப்படும் விளைவுகள் ஆகிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் அத்தியாயத்தில் இலக்கிய மீளாய்வு இடம் பெறுகின்றது.

மூன்றாம் அத்தியாயத்தில் ஆய்வு முறையியல் பற்றிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதில் அளவை நிலை ஆய்வு, அதன் நியாயப்படுத்தல், தரவு சேகரிப்பு, தரவு சேகரிப்பு முறை, வினாக்கொத்தின் அமைப்பாக்கம் என்பன விளக்கப்படுகின்றன.
நான்காம் அத்தியாயத்தில் தரவு சேகரிப்பும் பகுப்பாய்வும் உள்ளடக்கப்பட்டுள்ளது. அத்துடன் தரவுகளின் பகுப்பாய்வும் இனங்காணப்பட்ட பிரச்சினைகளும் விளக்கப்படுகின்றன.
ஐந்தாம் அத்தியாயத்தில் ஆய்வின் பெறுபேறுகளும் விதப்புரைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.